# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,407—1962 නොවැම්බර් 30 වැනි සිකුරාදා—1962.11.30

13,407 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் . . | 635 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | 636 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 640 |
| மாஜிஸ்ரேட்டுகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைச் சட்டம்

#### அறிவித்தல்

பாண் தயாரிப்புத்தொழில், செங்கல் ஓடு உற்பத்தித்தொழில், கட்டடத் தொழில், சினிமாத்தொழில், தெங்குப்பொருள் உற்பத்தித்தொழில், சிலிர்த்த தும்பு மெத்தைத்தும்பு ஏற்றுமதித்தொழில், இயந்திரத் தொழில், உறைநீர், வளிநீர் உற்பத்தித்தொழில், தீப்பெட்டி உற்பத்தித் தொழில், மோட்டோர்ப் போக்குவரத்துத்தொழில், அச்சடிப்புத்தொழில், ரப்பர் ஏற்றுமதித்தொழில், தேயிலை ஏற்றுமதித்தொழில் ஆகிய வற்றிற்குரிய சம்பளச் சபைகளில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த திரு. எம். எச். ஆர். அஸ்றபெரி தாமாக விலகியதால் அவருக்குப்பதிலாக அங்கம் வகிக்க திரு. ந. மகாதேவா என்பவரை (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வி. எஸ். எம். த. மெல்,<br>
தொழில், தேசியமய சேவை மந்திரி<br>
காரியாலய நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,<br>
1962 ம் ஆு நவெம்பர் மீ 20 ந் உ.

11-1324

### சம்பளச் சபைச் சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவை மந்திரி பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

(1) ரப்பர் வளர்த்தலும் பதப்படுத்தலும், தென்னை வளர்த்தல், தெங்குப்பொருள் உற்பத்தி, கள்ளு, சாராயம், வினாகிரி, காரீயம் ஆகிய தொழில்களுக்குரிய சம்பளச் சபைகளில் தொழிலாளரின் பிரதிநிதியாகவிருந்த திரு. எம். ஜி. மெண்டிஸ் தாமாக விலகியதால் அவருக்குபபதிலாக அங்கம் வகிக்க திரு. என். சண்முகதாசன் என்பவர் ;

(2) தீப்பெட்டி உற்பத்தி, உறைநீர், வளிநீர் உற்பத்தி ஆகிய தொழில் களுக்குரிய சம்பளச் சபைகளில் தொழிலாளரின் பிரதிநிதியாக விருந்த திரு. எம். ஜி. மெண்டிஸ் தாமாக விலகியதால் அவருக்குபபதிலாக அங்கம் வகிக்க திரு. கே. குலவீரசிங்கம் என்பவர் ;

(3) கறுவாத்தொழிற் சம்பளச் சபையில் தொழிலாளரின் பிரதிநிதி யாகவிருந்த திரு. எம். ஜி. மெண்டிஸ் தாமாக விலகியதால் அவருக்குப்பதிலாக அங்கம் வகிக்க திரு. வேணன் த லிவேரா என்பவர் .

வி. சா. ம. த மெல்,<br>
தொழில், தேசியமய சேவை மந்திரி<br>
காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,<br>
1962 ம் ஆு நவம்பர் மீ 20 ந் உ.

11-1319

---

### சம்பளச் சபைச் சட்டம்

#### அறிவித்தல்

காரியத்தொழில், அச்சடிப்புத்தொழில், ரப்பர் ஏற்றுமதித்தொழில், தேயிலை ஏற்றுமதித் தொழில் ஆகியவற்றிற்குரிய சம்பளச்சபைகளின் நியமன அங்கத்தவராக இருந்த டாக்டர் டபிள்யு. ரசபுத்ரம் தாமாக விலகியதால் அவருக்குப்பதிலாக அங்கம் வகிக்க திரு. எப். டீ. சீ. விஜேசிங்க என்பவரை (136 ம் அத்தியாயமாகிய), சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வி. எஸ். எம். த மெல்,<br>
தொழில், தேசியமய சேவை மந்திரி<br>
காரியாலய நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,<br>
1962 ம் ஆு நவெம்பர் மீ 20 ந் உ.

11-1328

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உப பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1962 ம் ஆ நவம்பர் மீ 20 ந் வ.

டி. பி. இலங்காரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்கு சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 10.10.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பதுளை மாவட்டாரம் | உப உணவுப் பொருட்கள் .. | 18.10.62 ம் திகதியைக்கொண்ட 13,353 ம் இலக்க |
| 10.10.62 .. | உபவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) மொனராகலை மாவட்டாரம் | உப உணவுப் பொருட்கள் .. | 18.10.62 ம் திகதியைக்கொண்ட 13,353 ம் இலக்க |
| 2.11.62 .. | பிரதிவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | உப உணவுப் பொருட்கள் .. | 2.11.62 ம் திகதியைக் கொண்ட 13,373 ம் இலக்க |
| 29.10.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) யாழ்ப்பாணம் மாவட்டாரம் | அரிசி .. .. | 6.11.62 ம் திகதியைக்கொண்ட 13,385 ம் இலக்க |
| 9.11.62 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | உப உணவுப் பொருட்கள் .. | 9.11.62 ம் திகதியைக்கொண்ட 13,388 ம் இலக்க |

11–1159

---

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## ஆசிரியர்களின் விதவை அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி

**1960 ம் ஆண்டு ஐப்பசி 1 ம் திகதியிலிருந்து 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி வரைக்குரிய பரிபாலன சபையின் அறிக்கை**

1. **பரிபாலன சபை.**—பரிபாலன சபையின் குழு அமைப்பில் ஒரு விதமான மாற்றமும் இவ்வறிக்கைக்குரிய வருடத்தில் ஏற்படவில்லை. திரு. ஆர். எஸ் ஜயவிக்ரம நியமன அங்கத்தவராக தொடர்ந்துள்ளார். 1958 ம் ஆண்டு ஐப்பசி 1 ம் திகதி தொடக்கம் பரிபாலன சபையின் காரியதரிசியும் கணக்காளருமாகக் கடமையாற்றிய திரு. பி. வி. ஜோர்ஜிற்குப் பதிலாக திரு. இ. பொன்னம்பலம் 1961 ம் ஆண்டு ஆடி 1 ம் திகதியிலிருந்து கடமையேற்றுள்ளார்.

2. **பணமுதவுபவர்கள்.**—1953 ம் ஆண்டு தொகுக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களின் இளைப்பாற்றுச் சம்பள 44 ம் இலக்கச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களின் இளைப்பாற்றுச் சம்பள ஒழுங்கு விதி 4 ற்கு 1961 ம் ஆண்டு தை 6 ம் திகதி 12,266 இலக்க இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திருத்தத்தின் நிமித்தம் பெருந்தொகையான பதிவு பெறாத ஆசிரியர்கள், ஆசிரியர்களின் இளைப்பாற்றுச் சம்பள திட்டத்திற்குப் பணமுதவ உரிமை உள்ளவர்களாக ஆகியுள்ளார்கள். அதனால் அவர்கள் ஆசிரியர்களின் விதவை அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் பணமுதவ உரிமை உள்ளவர்களாகின்றார்கள். ஆக மொத்தம் பணமுதவுபவர்களின் தொகை ஏறக்குறைய 30,000 வரும். ஆனால் 1961 ம் ஆண்டு புரட்டாதி முடிவுவரை ஒழுங்கு விதி 10 ன் கீழ் 17,250 குடும்ப விபர உறுதிப் பத்திரங்கள் கிடைத்துள்ளன.

3. **கட்டண இடாப்புகள்.**—சரிவரப் பூரணப்படுத்திய கட்டண இடாப்புகள் வித்தியபதியிடமிருந்து 1957–58 நிதி வருடந் தொடக்கம் கிடைக்கவில்லை. இதனால் விதவைகளுக்கு வழங்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம் வித்தியாபதியின் பற்று அத்தாட்சிப் பத்திரத்தைக் கொண்டே அனுமதிக்கப்படுகின்றன. இப்பற்று விபரம் கட்டண இடாப்புகள் கிடைக்கப்பெற்றபின் சரிபார்க்கப்படும். இவ்வழக்கம் பந்தோபஸ்தானதல்ல. ஆனால் வேறு வழியில்லை அன்றேல் காலஞ்சென்ற ஆசிரியர்களைச் சார்ந்திருப்போர் வீணான தாமதங்கட்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகவேண்டி நேரிடும்.

4. **நிதியின் ஆயுட் கணக்காய்வாளரின் மதிப்பு.**—1956 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி முடிவடைந்த இந்நிதியின் முதலாவது ஐந்துவருட மதிப்பிற்குத் தேவையான புள்ளி விபரங்கள் ஆயுள் ஆய்வுக்காரருக்கு 1959 ம் ஆண்டு மார்கழி மாதம் அனுப்பப்பட்டு அவரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது.

1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதியில் உள்ளபடி இந்நிதியின் இரண்டாவது ஐந்துவருட மதிப்பு இப்பொழுது தொடங்க வேண்டிய காலம். ஆனால் இந்நிதிக்குப் பணமுதவத் தகுதிவாய்ந்த எல்லா ஆசிரியர்களிடமும் இருந்து குடும்ப விபர உறுதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்று, அத்துடன் நிதிவருடம் 1960–61 முடிவுவரைக்கும் உரிய கட்டண இடாப்புகளும் பெற்று, பணமுதவுபவர்களின் தனித்தனி கணக்குகள் எல்லாம் சரிவரப் போடாமல் இந்நிதியை மதிப்பிட்டால் விரும்பிய பலன் கிட்டாது.

5. **கோரிக்கைகள்.**—இவ்வறிக்கைக்குரிய காலத்தில் 56 இளைப்பாற்றுச் சம்பள மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆக 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதிவரை மொத்தம் 442 மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. முதல் பத்து வருடங்களுக்கும், இதுவரை வழங்கப்பட்டுள்ள இளைப் பாற்றுச் சம்பளங்களின் மொத்தச் செலவு கிட்டத்தட்ட வருடத்திற்கு ரூபா 92,500 ஆகும்.

27 ம், 28 ம் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் 28 பேர்களுக்கு கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது. 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதிவரை, மொத்தம் 204 பேர்களுக்குப் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது.

6. **தாபனச் செலவு.**—இந்நிதிக்கு இவ்வருடம் அரசாங்கத்தின் பங்காகச் செலுத்திய கட்டணம் ரூபா 1,046,570.43 அத்துடன் கடந்த வருடத்திய தொகையாக ரூபா 2,242.90 அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த நிதிவருடத்தில் இந்நிதிக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபா 989,501.60. அரசாங்கம் தாபனச் செலவுகளையும் பரிபாலன சம்பந்தமான ஏனைய செலவுகளையும் ஏற்றுக்கொள்கிறது. அத்துடன் இந்நிதியில் இருந்து வழங்கப்படும், இளைப்பாற்றுச் சம்பளங்களுக்குப் பஞ்சப்படிகளையும் அரசாங்கம் கொடுக்கிறது.

7. **முதலீடுகள்.**—1953 ம் ஆண்டின் ஆசிரியர்களின் இளைப்பாற்றுச் சம்பள 44 ம் இலக்கச் சட்டத்தின் 5 (1) பிரிவின்படி இந்நிதியின் மிகுதிப் பணம் நம்பிக்கைச் சட்டம் (தலைப்பு 87) 20 ம் பிரிவில் விதிக்கப்பட்ட பொறுப்புகளில் செலுத்தப்படுகின்றன. இவ்வறிக்கைக்குரிய வருடத்தில் 4½% இலங்கை அரசாங்கக் கடன் முதலீட்டில் செலுத்திய முழுத் தொகை ரூபா 2,533,726 அதன் பெறுமதி ரூபா 2,533,800.

1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி முடிவடைந்த பத்து வருடங்களுக்கும் முதலீட்டில் செலுத்திய முழுத் தொகை ரூபா 13,096,083. அந்த அரசாங்க பொருளிருப்பின் பெறுமதி ரூபா 13,064,100. அவைகளின் வருடாந்த வட்டி 2½ வீதம் தொடக்கம் 4¼ வீதம் வரைக்கும் உள்ளன. இந்த முதலீட்டில் இருந்து வரும் வருடாந்த வட்டி ரூபா 453,713 எனப் பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளது. :—

| வாங்கிய விலை ரூ. ச. | பொருள் இருப்பின் பெறுமதி ரூ. ச. | வட்டி வீதம் | வருடாந்த வட்டி ரூ. ச. |
|---|---|---|---|
| 5,176 0 | 6,000 0 | 2½% | 150 0 |
| 3,189,869 75 | 3,194,300 0 | 3 % | 95,829 0 |
| 2,601,003 0 | 2,601,000 0 | 3¼% | 84,532 50 |
| 4,766,308 25 | 4,729,000 0 | 3½% | 165,515 0 |
| 2,533,726 0 | 2,533,800 0 | 4¼% | 107,686 50 |
| 13,096,083 0 | 13,064,100 0 | | 453,713 0 |

மிகுதிப்பணமாக திறைசேரி பிரதிக்காரியதரிசியிடம் 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதியிருந்த ரூபா 672,646.30, இப்பொழுது 4¼% இலங்கை அரசாங்கக் கடன் பத்திரங்களில் செலுத்தியாகிவிட்டது.

8. **வட்டி.**—இவ்வருடத்திற்கு வட்டியாகக் கிடைத்த தொகை ரூபா 371,875.19. கடந்த வருடம் வட்டியாகக் கிடைக்கப்பெற்ற தொகை ரூபா 284,082.21. அடுத்த நிதிவருடத்தில் இந்நிதியின் பணத்தை முதலீட்டில் செலுத்தியதிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டி ஏறக்குறைய ரூபா 500,000 எனக் கணிக்கப்பட்டுள்ளது.

9. **கணக்கு.**—1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி முடிவடைந்த வருடத்திற்குரிய வரவு செலவுப் பட்டியலும் அத்துடன் இவ்வருடத்திற்கான முதலீட்டுப் பட்டியலும், 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி முடிவடைந்த முதல் பத்து வருடங்களுக்கும் ஒன்று சேர்க்கப்பட்ட வரவு செலவுப் பட்டியலும், அத்துடன் 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதியில் இந்நிதியின் பொருளிருப்பு விபரமும் முறையே கணக்குப் பரிசோதனை அதிபதியால் பரிசோதிக்கப்பட்டு இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

இ. பொன்னம்பலம்,
காரியதரிசியும் கணக்காளரும்.

கு. பாலசிங்கம், தலைவர்
ஏ. சி. அலஸ், எஸ். எப். டி. சில்வா,
பி. டி. உடுவெல, என். சபாரத்தினம்,
பரிபாலன சபையின் அங்கத்தவர்கள்.

**ஆசிரியர்களின் விதவை அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி**

**1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான வரவு செலவுக் கணக்கு விபரம்**

| வரவுகள் | | ரூ. ச. | செலவுகள் | | ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| முன்னிருப்புத் தொகையாக | | 806,340 29 | முதலீட்டிற்காக | | 2,533,726 0 |
| கட்டணமாக | | 1,047,368 3 | இளைப்பாற்றுச் சம்பளமாக | | 87,821 30 |
| கட்டணமாக (ஒழுங்குவிதி 21 ன் படி) | | 913 55 | திருப்பிக் கொடுக்கப்பட்ட கட்டணமாக | | |
| இந்நிதிக்கு அரசாங்கக் கட்டணமாக | | | ஒழுங்குவிதிகள் 27, 28 ன் படி | 5,718 9 | |
| 1959–60 | 2,242 90 | | மிதமிஞ்சிய அறவிடுதலாக | 330 56 | |
| 1960–61 | 1,046,570 43 | | | | 6,048 65 |
| | | 1,048,813 33 | | | |
| முதலீட்டின் வட்டியாக | | 371,875 19 | நானாவிதச் செலவாக | | 3,022 59 |
| நானாவித கணக்குப் பற்றுக | | 2,654 45 | மிகுதிப் பணமாக திறைசேரி பிரதிக் காரியதரிசியிடம் | | 672,646 30 |
| திரும்பப் பெற்ற முதலீடாக | | 25,300 0 | | | |
| மொத்தம் | | 3,303,264 84 | மொத்தம் | | 3,303,246 84 |

**குறிப்பு.**—இந்நிதியிலிருந்து வழங்கப்பட்ட இளைப்பாற்றுச் சம்பளத்துடன் பஞ்சப்படியாகவும் விசேடப்படியாகவும் முறையே வழங்கப்பட்ட நிகரத் தொகைகள் ரூபா 172,088.84 சதமும், ரூபா 97,057.97 சதமுமாகும். இச் செலவுகள் எல்லாம் 1960–61 ம் ஆண்டுத் திட்டத்தின்கீழ் உள்ள தலைப்பு 33, வாக்கு 2 உபதலைப்பு 2 ல் பொறுக்கப்பட்டுள்ளன.

இ. பொன்னம்பலம்,
காரியதரிசியும் கணக்காளரும்,
பரிபாலன சபை,
ஆசிரியர்களின் விதவை அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி.

கு. பாலசிங்கம்,
திறைசேரியின் பிரதிக் காரியதரிசியும், சபைத்தலைவரும்,
பரிபாலன சபை,
ஆசிரியர்களின் விதவை அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி.

1954 ம் ஆண்டின் ஆசிரியர்களின் விதவை அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதியின் ஒழுங்குவிதி 6 (1)ன் பிரகாரம், 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான ஆசிரியர்களின் விதவை அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதியின் கணக்கு விபரங்கள் என் தலைமையின் கீழ் பரிசோதிக்கப்பட்டது. பரிபாலன சபையின் தலைவருக்கு 1962 ம் ஆண்டு புரட்டாதி 27 ம் திகதி நான் அனுப்பிய அறிக்கை இலக்கம் P-5/T-18 உள்ள கவனிப்புகளுக்கமைய மேலே கொடுக்கப்பட்ட 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான வரவு செலவுக் கணக்கு விபரம் அவ்வருடத்தில் இந்நிதியின் எல்லா வரவு செலவுகளையும் சரிவரக் காட்டுகின்றது என்பது என் அபிப்பிராயம்.

கணக்குப் பரிசோதனைக் கந்தோர்,
கொழும்பு 7, 1962 ம் ஆண்டு புரட்டாதி மீ 27 ந் உ.

டி. எஸ். டி. சில்வா,
கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபருக்காக.

## ஆசிரியர்களின் விதவை அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி

### 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி முடிவடைந்த காலத்துக்குரிய ஒன்று சேர்க்கப்பட்ட வரவு செலவுக் கணக்கு விபரம்

**வரவு**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| 30.9.60 வரைக்குரிய கட்டணமாக | 5,345,235 7 | |
| 1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக் குரிய கட்டணமாக .. | 1,047,368 3 | 6,392,603 10 |
| 30.9.60 வரைக்கு ஒழுங்குவிதி 21 ன் கீழ் கட்டணமாக .. | 3,758 27 | |
| 1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக்கு ஒழுங்குவிதி 21 ன் கீழ் கட்டணமாக .. | 913 55 | 4,671 82 |
| 30.9.60 வரைக்குரிய அரசாங்க கட்டணமாக .. | 5,342,902 97 | |
| 1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக் குரிய அரசாங்க கட்டணமாக .. | 1,048,813 33 | 6,391,716 30 |
| 30.9.60 வரைக்குரிய முதலீட்டின் வட்டியாக .. | 997,155 63 | |
| 1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக் குரிய முதலீட்டின் வட்டியாக | 371,875 19 | 1,369,030 82 |
| 30.9.60 வரைக்குரிய மிதமிஞ்சிய அறிவிடுதலாக .. | 79,975 74 | |
| 1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக்குரிய மிதமிஞ்சிய அறவிடுதலாக | 2,654 45 | 82,630 19 |
| முந்திய முதலீடுகளுக்கு மேல்மிச்சமாகத் திரும்பப் பெற்ற முதலீட்டின் தொகையாக .. | | 5,703 83 |
| | | 14,246,356 6 |

**செலவு**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| 30.9.60 வரைக்குரிய இளைப்பாற்றுச் சம்பளமாக .. | 276,937 66 | |
| 1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக் குரிய இளைப்பாற்றுச் சம்பளமாக | 87,821 30 | 364,758 96 |
| 30.9.60 வரைக்கும் ஒழுங்குவிதி 27, 28 ன் கீழ் திருப்பிக் கொடுக்கப் பட்ட கட்டணமாக .. | 23,243 23 | |
| 1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக்கும் ஒழுங்கு விதி 27, 28 ன் கீழ் திருப்பிக்கொடுக்கப்பட்ட கட்டணமாக | 5,718 9 | 28,961 32 |
| 30.9.60 வரைக்கும் திருப்பிக் கொடுக்கப்பட்ட மிதமிஞ்சிய அறவிடுதலாக .. | 80,553 33 | |
| 1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக் கும் திருப்பிக் கொடுக்கப்பட்ட மிதமிஞ்சிய அறவிடுதலாக .. | 3,353 15 | 83,906 48 |
| 30.9.60 வரைக்குரிய முதலீடுகளாக | 10,562,357 0 | |
| 1.10.60 தொடக்கம் 30.9.61 வரைக்குரிய முதலீடுகளாக .. | 2,533,726 0 | 13,096,083 0 |
| மிகுதித் தொகையாக .. | .. | 672,646 30 |
| | | 14,246,356 6 |

**பொருளிருப்பு**

| | ரூ. ச. |
|---|---|
| அரசாங்கக் கடன் முதலீட்டில் .. .. .. | 13,096,083 0 |
| மிகுதிப் பணமாக திறைசேரி பிரதிக் காரியதரிசியிடம் .. .. | 672,646 30 |
| | 13,768,729 30 |

பி. வி. ஜோர்ஜ்,
காரியதரிசியும் கணக்காளரும், பரிபாலன சபை,
ஆசிரியர்களின் விதவை அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி,
கொழும்பு, 1962 ம் ஆண்டு ஆனி மீ 8 ந உ.

கு. பாலசிங்கம்,
திறைசேரியின் பிரதிக் காரியதரிசியும்
சபைத்தலைவரும் பரிபாலன சபை,
ஆசிரியர்களின் விதவை அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி.

1962 ம் ஆண்டு புரட்டாதி 27 ம் திகதி அனுப்பிய என் அறிக்கை இலக்கம் P-5/T—18 ல் உள்ள கவனிப்புகளுக்கமைய பரிசோதிக்கப்பெற்று சரி என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கணக்குப் பரிசோதனைக் கந்தோர்,
கொழும்பு 7, 1962 ம் ஆண்டு புரட்டாதி மீ 27 ந் உ.

டி. எஸ். டி சில்வா,
கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபருக்காக.

### முதலீடுகள் 1960–61

| | திகதி | கடன் பத்திரங்களின் விபரம் | பெறுமதி ரூ. ச. | வீதம் | வாங்கிய விலை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. | 1.11.60 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1981–85 .. | 600,000 0 | .. நூறு .. | 600,000 0 |
| 2. | 1.12.60 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1981–85 "B" வர்க்கம் .. | 150,000 0 | .. ,, .. | 150,000 0 |
| 3. | 16. 1.61 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1982–86 .. | 250,000 0 | .. ,, .. | 250,000 0 |
| 4. | 22. 2.61 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1982–86 "B" வர்க்கம் .. | 200,000 0 | .. ,, .. | 200,000 0 |
| 5. | 20. 5.61 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1982–86 "C" வர்க்கம் .. | 500,000 0 | .. ,, .. | 500,000 0 |
| 6. | 1. 7.61 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1982–86 "D" வர்க்கம் .. | 125,000 0 | .. ,, .. | 125,000 0 |
| 7. | 6. 7.61 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1982–86 .. | 8,500 0 | .. 99 .. | *8,426 0 |
| 8. | 14. 7.61 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1982–86 "D" வர்க்கம் .. | 175,000 0 | .. நூறு .. | 175,000 0 |
| 9. | 1. 8.61 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1982–86 "E" வர்க்கம் .. | 25,300 0 | .. ,, .. | **25,300 0 |
| 10. | 7. 9.61 .. | இலங்கை அரசாங்க 4¼% கடன் 1982–86 "F" வர்க்கம் .. | 500,000 0 | .. ,, .. | 500,000 0 |
| | | | 2,533,800 0 | | 2,533,726 0 |

*மாற்றத்தின் செலவும் வாங்கிக் கொடுத்தவரின் கூலியுமாக ரூபா 11 சேர்க்கப்பட்டுள்ளது.
**திரும்ப முதலீட்டில் செலுத்தப்பட்டது. முந்திய முதலீட்டின் விலை ரூபா 25,541.75.

இ. பொன்னம்பலம்,
காரியதரிசியும் கணக்காளரும், பரிபாலன சபை
ஆசிரியர்களின் விதவை அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி.
கொழும்பு, 1961 ம் ஆண்டு மார்கழி மீ 29 ந் உ.

கு. பாலசிங்கம்,
திறைசேரியின் பிரதிக்காரியதரிசியும் சபைத்
தலைவரும், பரிபாலன சபை,
ஆசிரியர்களின் விதவை அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி.

## ஆசிரியர்களின் விதவை அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி

### 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதியில் உள்ளபடி பொருள் இருப்பு விபரம்

அ· அரசாங்கக் கடன்கள்

| இலக்கம் | விபரம் | பெறுமதி ரூ. ச. | வாங்கிய விலை ரூ. ச. | 1961 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதியில் விற்கும் வீதமும் | விலையும் |
|---|---|---|---|---|---|
| 1. | $2\frac{1}{2}$% தேசிய அபிவிருத்திக் கடன் 1967–72 | 6,000 00 | 5,176 00 | $91\frac{11}{16}$ | 5,501 25 |
| 2. | 3 % கடன் 1973–78 | 38,000 00 | 35,961 50 | $90\frac{1}{4}$ | 34,295 00 |
| 3. | 3 % கடன் 1972–77 | 81,300 00 | 78,282 25 | $90\frac{15}{16}$ | 73,932 19 |
| 4. | 3 % ஸ்ரீ லங்கா கடன் 1969–74 | 1,000,000 00 | 1,000,626 00 | $95\frac{3}{16}$ | 951,875 00 |
| 5. | 3 % கடன் 1969–72 | 500,000 00 | 500,000 00 | $96\frac{5}{16}$ | 481,562 50 |
| 6. | 3 % கடன் 1970–73 | 225,000 00 | 225,000 00 | $96\frac{3}{16}$ | 216,421 87 |
| 7. | 3 % இலங்கை அபிவிருத்திக் கடன் 1970–73 | 100,000 00 | 100,000 00 | $95\frac{3}{4}$ | 95,750 00 |
| 8. | $3\frac{1}{4}$% கடன் 1975–80 | 235,000 00 | 235,000 00 | $90\frac{3}{8}$ | 212,381 25 |
| 9. | $3\frac{1}{4}$% கடன் 1976–81 | 100,000 00 | 100,000 00 | $90\frac{1}{4}$ | 90,250 00 |
| 10. | $3\frac{1}{4}$% கடன் 1973–77 | 216,000 00 | 216,003 00 | 94 | 203,040 00 |
| 11. | $3\frac{1}{4}$% கடன் 1974–78 | 200,000 00 | 200,000 00 | $93\frac{11}{16}$ | 187,375 00 |
| 12. | $3\frac{1}{4}$% கடன் 1974–78 " B " வர்க்கம் | 700,000 00 | 700,000 00 | $92\frac{7}{8}$ | 650,125 00 |
| 13. | $3\frac{1}{4}$% கடன் 1975–79 " B " வர்க்கம் | 400,000 00 | 400,000 00 | $92\frac{7}{16}$ | 369,750 00 |
| 14. | $3\frac{1}{2}$% தேசியக் கடன் 1964–69 | 1,062,400 00 | 1,092,692 75 | $101\frac{3}{4}$ | 1,080,992 00 |
| 15. | $3\frac{1}{2}$% கடன் 1979–83 | 100,000 00 | 100,000 00 | $91\frac{9}{16}$ | 91,562 50 |
| 16. | $3\frac{1}{2}$% கடன் 1980–84 | 936,600 00 | 936,600 00 | $90\frac{5}{8}$ | 848,793 75 |
| 17. | $3\frac{1}{2}$% கடன் 1980–84 " B " வர்க்கம் | 200,000 00 | 200,000 00 | $90\frac{7}{16}$ | 180,875 00 |
| 18. | $3\frac{1}{2}$% கடன் 1975–79 | 300,000 00 | 300,000 00 | 95 | 285,000 00 |
| 19. | $3\frac{1}{2}$% கடன் 1976–80 | 1,100,000 00 | 1,100,000 00 | $94\frac{1}{2}$ | 1,039,500 00 |
| 20. | $3\frac{1}{2}$% கடன் 1976–80 " B " வர்க்கம் | 200,000 00 | 200,000 00 | $94\frac{3}{8}$ | 188,750 00 |
| 21. | $3\frac{1}{2}$% கடன் 1976–80 " C " வர்க்கம் | 175,000 00 | 175,000 00 | $94\frac{1}{4}$ | 164,937 50 |
| 22. | $3\frac{1}{2}$% கடன் 1976–80 " D " வர்க்கம் | 150,000 00 | 150,000 00 | $94\frac{7}{16}$ | 141,093 75 |
| 23. | $4\frac{1}{4}$% கடன் 1981–85 | 600,000 00 | 600,000 00 | $100\frac{3}{4}$ | 604,500 00 |
| 24. | $4\frac{1}{4}$% கடன் 1981–85 " B " வர்க்கம் | 150,000 00 | 150,000 00 | $100\frac{5}{8}$ | 150,937 50 |
| 25. | $4\frac{1}{4}$% கடன் 1982–86 | 258,500 00 | 258,426 00 | $100\frac{7}{16}$ | 259,630 94 |
| 26. | $4\frac{1}{4}$% கடன் 1982–86 " B " வர்க்கம் | 200,000 00 | 200,000 00 | $100\frac{7}{16}$ | 200,875 00 |
| 27. | $4\frac{1}{4}$% கடன் 1982–86 " C " வர்க்கம் | 500,000 00 | 500,000 00 | $100\frac{5}{16}$ | 501,562 50 |
| 28. | $4\frac{1}{4}$% கடன் 1982–86 " D " வர்க்கம் | 300,000 00 | 300,000 00 | $100\frac{1}{8}$ | 300,375 00 |
| 29. | $4\frac{1}{4}$% கடன் 1982–86 " E " வர்க்கம் | 25,300 00 | 25,300 00 | $100\frac{1}{8}$ | 25,331 62 |
| 30. | $4\frac{1}{4}$% கடன் 1982–86 " F " வர்க்கம் | 500,000 00 | 500,000 00 | 100 | 500,000 00 |

ஆ. தொகுதிக் கடன்முறி

| இலக்கம் | விபரம் | பெறுமதி ரூ. ச. | வாங்கிய விலை ரூ. ச. | வீதம் | விலை |
|---|---|---|---|---|---|
| 31. | 3 % அரசாங்க அடமான வங்கி 1965–68 | 750,000 00 | 750,000 00 | $99\frac{1}{8}$ | 743,437 50 |
| 32. | 3 % தேசிய வீடமைப்பு 1969–71 | 85,000 00 | 85,000 00 | $97\frac{7}{8}$ | 83,193 75 |
| 33. | 3 % அரசாங்க அடமான வங்கி 1970–73 | 165,000 00 | 165,000 00 | 96 | 158,400 00 |
| 34. | 3 % தேசிய வீடமைப்பு 1970–73 | 100,000 00 | 100,000 00 | $95\frac{7}{8}$ | 95,875 00 |
| 35. | 3 % தேசிய வீடமைப்பு 1970–73 " B " வர்க்கம் | 150,000 00 | 150,000 00 | $95\frac{1}{2}$ | 143,250 00 |
| 36. | $3\frac{1}{4}$% தேசிய வீடமைப்பு 1970–72 | 500,000 00 | 500,000 00 | $98\frac{15}{16}$ | 494,687 50 |
| 37. | $3\frac{1}{4}$% தேசிய வீடமைப்பு 1976–81 | 50,000 00 | 50,000 00 | $89\frac{7}{16}$ | 44,718 75 |
| 38. | $3\frac{1}{4}$% தேசிய வீடமைப்பு 1974–78 | 200,000 00 | 200,000 00 | $93\frac{1}{2}$ | 187,000 00 |
| 39. | $3\frac{1}{2}$% தேசிய வீடமைப்பு 1969–71 | 505,000 00 | 512,015 50 | $102\frac{1}{8}$ | 515,731 25 |
| | | 13,064,100 00 | 13,096,083 00 | | 12,603,269 87 |

இ. பொன்னம்பலம்,
காரியதரிசியும் கணக்காளரும்,
பரிபாலன சபை,
ஆசிரியர்களின் விதவை அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி,
கொழும்பு, 1961 ம் ஆண்டு மார்கழி 29 ம் திகதி.

கு. பாலசிங்கம்,
திறைசேரியின் பிரதிக்காரியதரிசியும் சபைத் தலைவரும்,
பரிபாலன சபை,
ஆசிரியர்களின் விதவை அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி.

11—1195.

# நானாவிதம்

## பிரகடனம்

திரிகோணமலே மாவட்டத்திலுள்ள திரிகோணமலே பட்டினப் பிரிவிலுள்ள கால்நடைகளிடையே கால், வாய் நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க " தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டத்தின் " கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினுலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உப உட்பிரிவு (1) ன் விதிகளுக்கு அமையவும், அரசாங்க பிரதம மிருக வைத்தியரான அபேரத்தின பண்டாரநாயக ஆகிய யான், கீழ்க் குறித்த எல்லேகளுக்குள் அடங்கிய பிராந்தியத்தை ஒரு " தொற்று நோய்ப் பிரதேசம் " என்று பிரகடனப் படுத்துகின்றேன்.

வடக்கு : வங்காள விரிகுடா, கட்டுக்குளம் பத்துப்பிரிவு எல்லே ;
தெற்கு : தம்பலகாமம், கொட்டியாரம் பிரிவின் எல்லே ;
கிழக்கு : வங்காள விரிகுடா ;
மேற்கு : வடமத்திய மாகாண, மாவட்ட எல்லேகள்.

இப்பிரகடனம் மறு அறிவித்தலால் நீக்கப்படும்வரை இப்பகுதியிலிருந்தும், இப்பகுதிக்கும் கால்நடைகள் அல்லது மாட்டுவண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென்று இதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின் கீழ் பிரகடனம் செய்கின்றேன்.

" தொற்றுநோய் " பிராந்தியத்திலுள்ளவர்கள் சட்டப்பிரகாரம் கையாளவேண்டிய செயற்பாடுகளே எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்றுநோய் (விலங்குகள்) பிரமாணங்களே, கால்நடை உரிமையாளரும் மாட்டுவண்டிகள் உரிமையாளரும் தமது அவதானத்திற்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களே திரிகோணமலேப் பகுதியில் உள்ள மிருகவைத்தியரிடமிருந்தும் திரிகோணமலேப் பட்டினப் பகுதி காரியாதிகாரியின் களரியில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

ஈண்டு பொறிக்கப்பட்ட தேதி முதல் இப்பிரகடனம் செயல் முறைக்கு வந்துள்ளது.

அபேரத்ன பண்டாரநாயக,
அரச பிரதம மிருக வைத்தியர்.

கமத்தொழில் துணையதிபர் களரி,
(விலங்குற்பத்தி-சௌக்கியம்),
கமத்தொழிற்றுறை,
பேராதனே,
1962 ம் ஆண்டு நவெம்பர் மீ 22 ந் த.

11—1385.

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலே நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச்சேனே ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.